அசல் வழக்கு எண். 130/2018 நாள்: 01.06.2026

வா.சா.1 திரு. தமிழரசன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கினை தாக்கல் செய்தது யார் என்றால் பாலகிருஷ்ணன் ஆவார், அவர் எனக்கு அக்கா வீட்டுக்காரர் ஆவார். மேற்படி பாலகிருஷ்ணனுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 நபர்கள், அவர்கள் 1.நித்தியானந்தம், 2.முத்தமிழன், 3.மனோன்மணி, 4.பத்மா ஆவர். மேற்படி பாலகிருஷ்ணன் மனைவி பெயர் என்ன என்றால் வசந்தா ஆகும். மேற்படி பாலகிருஷ்ணன் எப்போது இறந்தார் என்றால் ஆகஸ்ட் 2022–ல் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்துவிட்டு வீட்டிற்கு சென்றபிறகு இறந்துவிட்டார். மேற்படி பாலகிருஷ்ணன் எத்தனை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 2 வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் பாலகிருஷ்ணன் என்ன பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வசந்தாவிற்கு வாரிசு என்று விளம்புகை செய்யக்கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2) பாலகிருஷ்ணன் தாக்கல் செய்துள்ள மற்றொரு வழக்கின் எண் தெரியுமா என்றால் அ.வ.எண்.2/2019 ஆகும், அதன் பரிகாரம் என்ன என்றால் பாலகிருஷ்ணனின் தம்பி மகன் எழுதிவைத்த ஆவணங்கள் செல்லாது என விளம்புகை செய்யக்கேட்டு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் பரிகாரமாக 1–ம் வாதியானவர் தாவா சொத்துக்களை பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் கடந்த 07.09.2018 தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல மற்றும் இல்லாநிலையது என விளம்புகை செய்யக்கேட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாலகிருஷ்ணன் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்கின்ற விவரம் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) மேற்படி பாலகிருஷ்ணனுக்கும் வசந்தாவிற்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் ஞாபகம் இல்லை, திருமணம் அழைப்பிதழ் வீட்டில் உள்ளது. மேற்படி பாலகிருஷ்ணனுக்கும் வசந்தாவிற்கும் குழந்தைகள் உள்ளதா என்றால் இல்லை. பாலகிருஷ்ணனின் சகோதரர் நித்தியானந்தம் என்றால் சரிதான். மேற்படி நித்தியானந்தம் மனைவி சரோஜா என்றால் சரிதான். மேற்படி சரோஜா 6 மாத கர்பினியாக இருக்கும்போது நித்தியானந்தம் இறந்துவிட்டார்

என்றால் சரிதான். மேற்படி நித்தியானந்தம்–சரோஜா தம்பதிக்கு பிறந்தவர்தான் 1 ஆம் பிரதிவாதியான சத்தியநாராயணன் என்றால் சரிதான்.

1 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/Tamilarasan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.01 16:20:12 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU